## கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா

## இளையோருக்கான கல்விசார் போட்டிகள்

## தமிழியல் அறிவுப்போட்டி - 2020

*12 வயதுக்கு உட்பட்டோருக்கான வினாக்கொத்து - விடைகள்*

1. மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்ட நிலம் எவ்வாறு அழைக்கப்படும்?
   குடாநாடு

2. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
   நெய்தல்

3. தொல் தமிழர் வழிபட்ட பெண் தெய்வத்தின் பெயர் என்ன?
   கொற்றவை

4. நீரிலும் நிலத்திலும் வாழும் மிருகம் எது?
   ஆமை

5. இரட்டைக் காப்பியங்கள் எவை?
   சிலப்பதிகாரம், மணிமேகலை

6. ஐவகை நிலங்களும் எவை?
   குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

7. கனடாவின் தேசியகீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
   கவிஞர் கந்தவனம்.

8. சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
   நம்பியாண்டார்நம்பி.

9. தமிழுக்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்து எது?
   “ழ“ –ழகரம்

10. நல்வழி எனும் நூலை எழுதியவர்?
    ஔவையார்

11. இலங்கையை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் வன்னியை ஆண்ட மன்னன் யார்?
    பண்டாரவன்னியன்.

12. கிளைகள் இல்லாத மரம் ஒன்று கூறுக.
பனை, தென்னை, கமுகு.

13. சைவசமயத்தினது முழுமுதற் கடவுள் யார்?
சிவபெருமான்

14. பண்டைய தமிழர் வாணிபம் செய்ய கடல் கடந்து சென்ற நாடுகள் யாவை?
சீனம், பாரசீகம், கிரேக்கம்.

15. திருக்குறள் எத்தினை அதிகாரங்களைக் கொண்டுள்ளது?
133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

16. திராவிட மொழிக் குடும்பத்தின் தாய் மொழி யாது?
தமிழ்

17. பண்டைய மன்னர்களின் வீரத்தின் சின்னமாக விளங்குவது எது?
வாள்

18. தமிழ் நூல்களில் மிகவும் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் நூல் யாது?
திருக்குறள்

19. பற்களின் தொகுதியை எவ்வாறு அழைப்பீர்?
பல்வரிசை

20. மூன்றுமுறை தலையில் குட்டி வணங்கப்பெறுபவர் யாார்?
பிள்ளையார்

21. மருத்துவரின் உதவியின்றி ஒருவர் தமக்குச் செய்யும் மருந்து யாது?
கைமருந்து

22. “நாலும் இண்டும் சொல்லுக்கு உறுதி“ இங்கே நான்கும் இரண்டும் எதனைக் குறித்து நிற்கிறது?
நாலடியார், திருக்குறள்.

23. முருகப்பெருமானின் வாகனம் யாது?
மயில்

24. முழு இலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த மன்னன் யார்?
இராசேந்திர சோழன்.

25. வரலாற்றுப் புகழ்பூத்த ஈழத்து வன்னியின் இரு மன்னர்கள் யார்?
குயிலைவன்னியன், பண்டாரவன்னியன்.

26. தமிழகத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் புரிந்து வீரச்சாவை தழுவிய வீரர் யாவர்?
வீரபாண்டிய கட்டப்பொம்மன், மருது பாண்டியர்.

27. தமிழ் மொழியில் கிடைத்துள்ள மிகப் பழைய இலக்கண நூல் யாது?
தொல்காப்பியம்

28. இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றல் நிறைந்தவர்கள் யார்?
படைப்பாளிகள்.

29. செற்றொடரின் உறுப்புகள் யாவை?
எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

30. முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்.

31. தமிழில் உள்ள முதல் எழுத்துக்கள் எவை?
30 (12 உயிர் எழுத்துக்கள், 18 மெய்யெழுத்துக்கள்)

32. தமிழர்களை ஆட்சி செய்த மூவரசுகள் எவை?
சேர அரசு, பாண்டிய அரசு, சோழ அரசு.

33. “பொய்யாமொழி“ என அழைக்கப்படும் நூல் யாது?
திருக்குறள்

34. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த மன்னன் யார்?
அதியமான்.

35. பாடல் பெற்ற ஈழத்துத் திருத்தலங்கள் இரண்டு கூறுக.
திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

36. மலையும் மலை சார்ந்த இடமும் எப்படி அழைப்பர்?
குறிஞ்சி.

37. மெய் எழுத்தின் மூன்று வகையும் எவை?
வல்லினம், மெல்லினம், இடையினம்.

38. தமிழர் கதிரவனுக்கு நன்றி செலுத்த எடுக்கும் விழா எது?
பொங்கல் விழா.

39. விகடம் என்றால் என்ன?
நகைச்சுவை.

40. தமிழில் காணப்படும் நான்கு வகை எழுத்துக்களும் எவை?
உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து.

41. தமிழரால் தொன்று தொட்டு பயன்படுத்தப்படும் இயற்கையான கிருமிக்கொல்லித் தாவரங்கள் இரண்டு கூறுக.
வேம்பு, மஞ்சள்.

42. கண் வளர்தல் என்றால் என்ன?
நித்திரை செய்தல்.

43. தமிழரின் தொன்மையான கலைகளில் ஒன்று தருக?
கூத்து.

44. தமிழர் அதிகம் பயன்படுத்தும் தானிய வகைகள் 4 கூறுக.
அரிசி, உழுந்து, பயறு, எள்ளு.

45. ."தமிழுக்கு அமுதென்று பெயர்" என்ற பாடலைப் பாடியவர் யார்?
பாரதிதாசன்.

46. மணிமேகலைக் காப்பியத்தை எழுதியவர் யார்?
சீத்தலைச் சாத்தனார்.

47. குழந்தைகள் தூங்க பாடப்படும் பாடல் எது?
தாலாட்டு.

48. மரபாக வாழ்ந்த இடத்தை விட்டு மற்றுமொரு இடத்திற்கு இடம் பெயர்வதை எவ்வாறு அழைப்பீர்?
புலப்பெயர்வு.

49. .புதிதாக செய்த தேர், கப்பல் முதலியவற்றை முதன் முதன் முதலாக பலரறிய ஓடவிடுதல் ...........
வெள்ளோட்டம்.

50. நான்கு பக்கமும் நீரால் சூழப்பெற்ற நிலப்பகுதியை எப்படி அழைப்பீர்?
தீவு.